# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் - 06 | பரதநாட்டியம் | 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

➢ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01) தட்டடவு எத்தனை வகைப்படும்?
(1) 6 (2) 7 (3) 8 (4) 4

02) ஒற்றைக்கை முத்திரையின் மறுபெயர்
(1) அஸம்யுதஹஸ்தம் (2) அபூர்வ ஹஸ்தம்
(3) ஸம்யுதஹஸ்தம் (4) பூர்வாங்க ஹஸ்தம்

03) கால்களைத் தட்டிச் செய்யும் அடவு
(1) குத்தடவு (2) தட்டடவு
(3) நாட்டடவு (4) பாய்தல் அடவு

04) 8வது தட்டடவு அமைந்துள்ள தாளம்
(1) ஆதி (2) ஏகம் (3) ஜம்பை (4) ரூபகம்

05) முருகக் கடவுளின் மீது பாடல்கள் பாடி ஆடும் கிராமிய நடனம்
(1) கும்மி (2) காவடி (3) கரகம் (4) கோலாட்டம்

06) தெய்தெய்தத்தத்தெய்தெய்தாம் என்ற சொற்கட்டை உடைய தட்டடவு
(1) 3 ஆவது (2) 5 ஆவது (3) 7 ஆவது (4) 8 ஆவது

07) சதுஸ்ர நடைக்குரிய சொற்கட்டு
(1) தகிட (2) தக (3) தகதிமி (4) தகதகிட

08) நமஸ்காரத்தில் வரும் இரட்டைக் கை முத்திரை
(1) சதுரம் (2) சிகரம் (3) அஞ்சலி (4) கடகாமுகம்

09) நாட்டடவு எனப் பெயர் வரக் காரணம்
(1) கால்களைத் தட்டிச் செய்வதால் (2) கால்களைத் நாட்டிச் செய்வதால்
(3) கால்களைக் குத்திச் செய்வதால் (4) கால்களைப் பாய்ந்து செய்வதால்

10) பரதநாட்டிய அடவுகளில் முதலாவது இடம்பெறும் அடவு
(1) தட்டடவு (2) குத்தடவு (3) நாட்டடவு (4) வீச்சடவு

11) தண்டியம் பற்றி முதன்முதலில் இடம்பெற்ற நூலின் பெயர்
(1) திருக்குறள் (2) பாரதியார் கவிதை (3) சிலப்பதிகாரம் (4) ஆத்திசூடி

12) ஆதி தாளத்தின் அங்க அடையாளம்
(1) லகு - த்ருதம் - அனுத்ருதம் (2) லகு - த்ருதம்
(3) த்ருதம் - லகு (4) த்ருதம் - லகு - த்ருதம்

13) சிங்கள நடன பாரம்பரியத்தில் தண்டியம் பயன்படும் அடவுப் பயிற்சி
(1) தட்டடவு (2) பாசறம்ப அடவு (3) நாட்டடவு (4) குத்தடவு



kalvi.lk

354

14) சின்ன சின்ன சிறுமியர்... என்ற பாடல்
(1) கதைப்பாடல் (2) தொழிற்பாடல் (3) பக்திப்பாடல் (4) அபிநயப்பாடல்

15) நமஸ்காரத்தின் போது வணங்கப்படும் இறைவன்
(1) சிவன் (2) பார்வதி (3) பூமாதேவி (4) பிள்ளையார்

16) பரதநாட்டியத்தின் பயிற்சி உபகரணம்
(1) தடி (2) தட்டுக்கழி (3) தாளம் (4) கயிறு

17) ஒற்றைக்கை முத்திரைகளின் எண்ணிக்கை
(1) 12 (2) 24 (3) 28 (4) 16

18) தட்டடவு 8வதில் இடம்பெறும் எண்ணிக்கை
(1) 4 (2) 8 (3) 7 (4) 6

19) யதோ ஹஸ்தத்ததோ திருஷ்டி என ஆரம்பிக்கும் ஸ்லோகம்
(1) நாட்டியக்கிரமம் (2) த்யான ஸ்லோகம்
(3) குரு ஸ்லோகம் (4) வணக்க ஸ்லோகம்

20) தேவதாசி என்பதன் பொருள்
(1) நாட்டியப்பெண் (2) கோயில் பெண்
(3) இறைவனின் பணிப்பெண் (4) ரிஷபதளியார்

**(20x1=20 புள்ளிகள்)**

## பகுதி - II

➢ முதலாம் வினா உட்பட விரும்பிய 2 வினாக்கள் தெரிவுசெய்து மொத்தம் 3 வினாக்களுக்கு விடை தருக.

01) 1) தவணை 2 இல் உமது ஆசிரியரால் மேற்கொண்ட கணிப்பீடுகள் 3 தருக.
2) செய்முறைக் கணிப்பீடு செய்த அடவு யாது?
3) நீர் கணிப்பீடு செய்த அடவினைச் சொற்கட்டு குறியீட்டில் எழுதுக.

**(3+1+6=10 புள்ளிகள்)**

02) ஸத்யான ஸ்லோகத்தினையும் அதன் கருத்தினையும் எழுதுக.

**(10 புள்ளிகள்)**

03) தண்டியம் பற்றிய குறிப்பு எழுதுக.

**(10 புள்ளிகள்)**

04) 1) ஒற்றைக்கை முத்திரையின் மறுபெயர் யாது?
2) அதன் எண்ணிக்கை யாது?
3) ஒற்கைக்கை முத்திரையை வரிக்கிரமமாகத் தருக.

**(1+1+8=10 புள்ளிகள்)**



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page